# திருமால் தலங்கள்

தம்பியுடன் கானகம் முழுவதும் திரிந்த
அம்பொன்றால் ஏழு மரங்களை முறித்த
நம்பியவர்க்கு அருள் புரிய நின்ற
1. மாம்பலமுறை இராமனுக்கு ஈடெவருண்டு!

பெருமானே உன்னடிசேர்ந்தார் உயர்ந்திடவே
இருமகளுடன்சேர்ந்து அருள்புரிபவனே
ஒருமனதாய் இன்றென்னுள்ளம் அமர்ந்தாய்
2. அரும்புலியூர் வாழ்தேவனே வைகுந்தனே!

அசைந்தாடும் மயிற்பீலி நின்தலையிலாட
இசைபாடும் வேங்குழல் அதரம் பொருந்த
திசையெட்டும் வானவர் கேட்டு மகிழ்ந்தாட
3 வசைபாடும்வண்டுசூழ் அல்லிக்கேணிகிடந்தானே

சதுர்வேதமும் பரிமுகங்கொண்டு ஈந்து
சதுர்முகனைபரிவுடன் படைத்தளித்துக்காத்து
சதுர்திக்கும் புகழ்பரவி திகழுமிராமனை
4 சதுர்புஜனாகக் கண்டேன் பொன்பதிர்கூட்டமதில்

நாராயணனே பரனென்ற எண்ணம்
மாறாதே துயர்பல நான்பெற்றிடினும்
தீராதே என்காதல் உந்திருவடிமீதிருந்தும்
5 ஆராவமுதனேயுனைகுடந்தையில்கண்டபின்னே

மங்கையவள் கரம்பிடிக்க வில்லைமுறித்தவன்
சிங்கமதுவுருகொண்டு அரக்கனை அழித்தவன்
சங்கமதுகைக்கொண்டு போர்தனைமுடித்தவன்
6 தங்கமது மேனியாகி திருமலையில் நின்றவன்

அருவுருவாகியன்று அரக்கனையழித்தாய்
திருமகளை வலக்குறங்குதனில் வைத்தாய்
அருமறைநான்கும் புகழ்கின்ற திருமாலை
7 திருவாலிநகர்தனில் கண்டுமன மகிழ்ந்தேன்

கூவிஅழைக்கும் புள்ளினங்கள் அமர்மாடமும்
பூவினில்தேனுண்ணும்வண்டுசூழ்சோலையும்
காவியணிந்தமுனிசிரேட்டர்கள்உறை அரங்கமும்
8 சேவித்தே அருள்பெற்றேன் அரங்கனடிதனில்!

வரமொன்றால் கானகமேவி துயருற்றவனே
கரமதில்சங்கேந்திபாரதப்போர் முடித்தவனே
வரங்கேட்ட இரணியனை இருகூறாக் கியவனே
9 வரதனே காஞ்சியில் உன்னழகைக் கண்டேனே!

நான்கு மறைபுகழ் நாரணன் நீயன்றோ
நான்முகனும் அறியான் நின் புகழன்றோ
பாங்குடனே நீயமர்ந்து உறையுதலமன்றோ
10 நான்குநேரிநகர் வாழ் நாதன் நீயன்றோ!

“பொய்கையடியானின்” திருமால்தலங்கள் தொடரும்